[illegible]

V 11 No. 8 Aug 1929

5L

211 N19B0

M29.11.8

L10777



33
REGD NO: M 1530.
"BALAVINODHINI"
CHILDREN'S FRIEND
பாலவிநோதினி
குழந்தைகளின் அன்பன்.
ஆசிரியர்:
வரகவி திரு. அ. சுப்பிரமணியபாரதி.
Vol XI AUG. 1929 No. 8
PRINTED AND PUBLISHED
BY
V. RAMASWAMY SASTRULU & SONS
323, Tiruvottiyur High Road
Tondiarpet, MADRAS.

*N. B*:—The Subscribers are requested to pay subscriptions t
our agents only on obtaining our Bonafide receipts.

**All Rights Reserved by the Publishers.**

# பாலவிநோதினி

## CONTENTS—பொருளடக்கம்


| | | | பக்கம். |
|---|---|---|---|
| தெய்வ வணக்கம் | ... | ... | 353 |
| ஹிதோபதேசம் | ... | ... | 354, 356 |
| பொறுமையும் கோபமும் | ... | ... | 357—366 |
| கடவுளே கதி | .. | ... | 367—374 |
| மகாலட்சுமிக்கும் பார்வதிக்கும் வாக்குவாதம் | | | 374 |
| தைர்யம் தலைகாக்கும் | ... | ... | 375—378 |
| தீமைசெய்தவன் தீமை அடைவான் | | | 379, 380 |
| குதம்பை சித்தர் பாடல் | ... | ... | 381 |
| சிந்தனைக் கட்டளைகள் | ... | ... | 382, 383 |
| ஸீதா தேவியும் அநஸூயையும் | | ... | 384—386 |
| நான் கண்ட புதுமை | ... | ... | 388—390 |
| லக்ஷ்மி | ... | ... | 391, 392 |
| உடற்பயிற்சியும் சுகாதாரமும் | | ... | 393—396 |
| காலபேதங் காட்டுங் கருவி | | ... | 397 |
| வரலக்ஷ்மி விருதம் | ... | ... | 398—404 |
| மரத்தில் வசிக்கும் குடும்பம் | | ... | 404 |


குறிப்பு:—எமது கையொப்பமிட்ட எமது கம்பெனி
சீது பெற்றுக்கொண்டு ஏஜண்டுகளிடம் சந்தாத் தொகையை
சலுத்தக் கோருகிறோம். எமது ரசீது இல்லாமல் போனா
ப்புக்கொள்ளப்படமாட்டாது.

உ

செந்திலாண்டவன் திருவடி துணை

# பாலவிநோதினி

அல்லது

## குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை


தொகுதி 11 | 1929ஆம் ஆகஸ்டு மாதம் | பகுதி 8


### தெய்வ வணக்கம்.

அற்புத மிகப்புகழ் திருப்புகழ் விருப்பொடுகொள்
அருணகிரிதனை யுவந்தாய்
அம்புவியி லின்பமுறு கும்பமுனி முன்புவர
அன்புருகு பண்புரைத்தாய்
உற்பன வரக்கனொடு சர்ப்பன மனப்பயம்
உனுற்றநற் கீர னொருநாள்
உன்சலிகை தஞ்சமென நெஞ்சுருக வஞ்சக்
கிரவுஞ்ச னோர்கிரி பிளந்தாய்
எப்படியு முற்படும் வினைப்பயனுவப்பமதை
இப்புவியிலே மறுப்பாய்
ஈதுகலிகால மென்றெண்ணவொண்ணாது நான்
ஏழையடியே னுகையால்
தற்பரதயாபர [illegible] ர்மகிழ்ந்துதவு
சரசகோபாலன் [illegible] ா
சதுர்மறைகளோதந்த பரம குருவாய்வந்த
சரவணப வாநந்தனே.

(சுப்ரமண்ய தேசிகர்.)

210777.

# ஹிதோபதேசம்.

(1) ஒருவன் தன்னுடைய அன்பிற்குப் பாத்திரமா யிருப்பவனுடைய சுகத்தையே தன் சுகமாகக் கருதுகிறான். ஆகையினால்—தன்னுடைய பிரிய நண்பனை அவனையே தனக்கு அபூர்வமான த்ரவியமாகக் கருதுகிறான். ஆகையினால் ஸ்நேக ஸம்பத்தை விட மேலானது ஒன்றில்லை. இதனாலேதான் பெரியோர்கள் நல்லவர்களுடைய நட்பைப் பொருள் செலவிட்டாவது தேடிக்கொள்-என்றும்-உன்னுடைய நல்ல நண்பனுக்கு உன் வீட்டுக் கூரையை விறகாகக் கொடுத்தாவது அவன் ஆதரவு தேடிக்கொள் என்றும் கூறுகிறார்கள்.

(2) வரவில்லாத வாழ்க்கை விசனத்துக் கேதுவானது. ஆதலால் பணத்துக்குமேல் பணத்தைத் தேடித் தேடிய பணத்தைச் செட்டாய்ச் செலவிட்டு ஏதேனும் சேமித்துவைக்கப் பார்ப்பதுதான் அறிவுடைமையாகும். இப்படிச் செய்யாதவன் வாழ்க்கை பழிப்பிற் கிடமாகும். இதனாலேதான்.

"ஆன முதலில் அதிகம் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப்-போனதிசை
எல்லார்க்குங் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லானாம் நாடு"

என்று கூறினர் பெரியார்.



(3) நண்பனுக்குத் துரோகம் செய்பவன்-செய்த உபகாரத்தை மறப்பவன்-நம்பியவனைக் கெடுப்பவன்-இம்மூவரும் சந்திர சூரிய ருள்ளவரையில் நரகத்தை அடைவார்கள்-என்று சாஸ்திரங் கூறுகிறது. கஷ்டப்பட்டுத் தேடிக் காப்பாற்றும் மாமனார் செய்த நன்றியை மாப்பிள்ளை என்கிற ஈனமதியினன் வெகு எளிதில் மறந்து அவருக்கே துரோகம் செய்வதை நாம் அநேக வீடுகளில் இக்காலத்தில் பார்க்கின்றோம். அந்தோ-இந்தப் பாதகர்களுக்கு எந்த நரகம் கிடைக்குமோ தெரியவில்லை? இதனாலேதான் மாப்பிள்ளைக்குச் சோறுபோடுவதைவிட நாய்க்குச் சோறுபோட்டு வளர்ப்பது நன்றென்று பேசும்படியான சந்தர்ப்பம் நேரிட்டிருக்கிறது.

(4) யாருக்கும் ஆயுளானது அவர்கள் நினைத்தபடி நீளவாவது குறையவாவது போவதில்லை. ஆதலினால் உயிர்போய்விடுமே என்றபயத்தை விட்டுவிடுவதே புத்திசாலித்தனமாகும். பிராணபயம் ஒருவனைக் கீழானநிலைமைக்கே கொண்டுவரும். அது உயர்த்தாது. தைரியமே உயர்த்தும். பிராணபயத்தை யெண்ணி நடுக்கடலில் மாளிகை ஏற்படுத்திக்கொண்ட பரிக்ஷித்து மகாராஜனுடைய கதையைப் படித்துப் பாருங்கள். வாழ்க்கையின் நிலைமை தெரியும். மரணம்-பூர்வம் அயன் நியமித்தபடியே தவறாதமையும் என்பது நிச்சயம். நினைத்த இடத்திற்குச் செல்லத்தக்க வல்லமையும் நோய் நொடியில்லாத தேகதிடமும் உடையவரும் இறக்கின்றனர்! ஒழியாத தவத்திலிருப்பவரும்

சாகின்றனர்! விடாத யோகப்பயிற்சியி லிருப்பவரும் சாகின்றனர்! ஒருசமயம் தேவேந்திரனுடைய வஜ்ராயுதத்திற்கும் சாகாதிருந்தான் சம்பாரசுரன் என்னும் அசுரன். அப்பால் அந்த வஜ்ராயுதத்தினுல் அவனோடு அளவிறந்த அசுரர்களும் இறையானார்கள். ஆதலினுல் மரணபயத்தை மறந்து நல்லகாரியங்களில் உழைத்துப் புகழ்தேடிக்கொள்ள முயலுங்கள்.

(5) பகவான் அடியார்க்கடியன இதனை முன்னர் பார்த்தனுக்குக் கிருஷ்ணபகவான் ஸாரதியாக வமர்ந்து பார்த்தஸாரதி என்று பெயர் பெற்றனர் என்பதும்-சிவபெருமான் மதுரையில தன்னிடம் மாரு த அன்புசெலுத்திய பிட்டு வாணிச்சியின் கூலியாளாக அமர்ந்து கூலிவேலை செய்தனர் என்பதும் நன்குணர்த்துகிறபடியால்-பகவானையே மைப்படையுங்கள். அவனே அடியார்க்கெளியவனு யிருந்து என்றும் ஆதரிப்பான்.

---

ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் ஸைக்கில் வண்டியில் பூலோகத்தைச் சுற்றி வருகிருர்கள். அவர்கள் 1925-ம் ஆண்டு மார்ச்சில் புறப்பட்டார்கள். 17,500-மைல்தூரம் நடந்து விட்டார்கள். அவர்கள் சென்ற வாரம் பம்பாய் வந்து சேர்ந்தார்கள். டில்லி, காசி, கல்கத்தா வழியாக பர்மா போய் சீனு, சியம், ஜப்பான் வழியாக அமெரிக்கா சென்று தங்கள் தாய்நாடு போயச் சேர்வார். வழியில் எத்தனையோ தொல்லைகள் நேர்ந்தும அவர்கள் முயற்சியை விடவில்லை.

## பொறுமையும் கோபமும்.

பாண்டவர் ஐவரும் தங்கள் மனைவியாகிய திரௌபதியுடன் மாறுவேடம் பூண்டு விராடநகரத்திலிருந்து அக்ஞாதவாசம் செய்தார்கள் என்று படித்திருக்கிறீர்களல்லவா?- அவர்கள் அக்ஞாதவாசத்தை முடிக்கிற தருணத்தில்-கங்கபட்டர் என்கிற பெயருடன் விராடனிடம் இருந்து வந்த தருமபுத்திரனை விராடராஜன் சூதாடுவதற்கு அழைத்தான். விராடராஜன் அப்பொழுது, அர்ஜுனனை ஸாரதியாகக் கொண்டு கௌரவர்களை எதிர்க்கச்சென்ற தன்மைந்தன் போரில் வெற்றிபெற்று வருவதாகச் செய்தி கேட்டுப் பெருமகிழ்ச்சியுடனிருந்தான். கங்கபட்டர் அவனை நோக்கி, "வேந்தே, சூதாடுவதேகூடாது. அதிலும் சந்தோஷமடைந்திருக்கிறவர்களுடன் ஆடுவது விபரீதத்திற்குக் கொண்டுபோய் விடுமாதலால், சந்தோஷமற்றவனுயிருக்கும் எனக்குச் சூதாடவிருப்பமில்லை" என்ருர்.

விராடன்—"கங்கபட்டரே, எனக்கு இச்சமயம் சூதாடுவதைத்தவிர வேறொன்றிலும் விருப்பம் செல்லவில்லை. விளையாட்டுக்கு ஆடுவோம் வாரும்" என்ருன்.

கங்கபட்டர்-"சூது அநேகதோஷங்களுக்கு ஆதாரமானது. சூதாட்டத்தில் பலகுறைகளுண்டு. தர்மராஜாவான யுதிஷ்டிரர் சூதாட்டத்தினுல் பட்டபாடு

களை நீர் அறிவீர். சூதாட்டம் ஒருவர்மேல் ஒருவர்க்குள்ள பிரியத்தைக்கெடுக்கும். வீணே கொடுஞ்சொற்களைப் பேசச்செய்யும். ஆகையினால் புத்திமான்கள் அதை விரும்புவதில்லை" என்றான்.

விராடன் -கங்கபட்டரே, சூதாட்டம் தீமை விளைவிக்கக் கூடியதென்பது எனக்குத்தெரியாதா? இருந்தாலும் இச்சமயம் அதில் புத்தி நாடுகிறபடியால், வாரும் கொஞ்சநேரம் விளையாடுவோம்— என, கங்கபட்டர் இசைந்தார்.

பின் சூதாடத்தொடங்கி இருவரும் ஆடினார்கள். அப்பொழுது விராடன், "கங்கபட்டரே, பாருங்கள் என்மகன் நிகரற்றவீரர்களாகிய கௌரவர்களை ஜயித்துவிட்டான். பசுக்களையும் மீட்டுக்கொண்டு வந்துவிட்டான்—" என்று பெருமை பேசிக்கொண்டான்.

இப்பொழுது விராடனுடைய மைந்தனாகிய உத்தரகுமாரன் யுத்தகளத்திலிருந்து வரவில்லை. ஜயம் பெற்றான்- மாடுகளைமீட்டுக்கொண்டுவருகிறான்- என்னும் செய்திமாத்திரம் கிடைத்திருக்கிறது. விராடன் இதற்குள் இப்படி பெருமைபேசிக்கொண்டான். ஆனால் கௌரவர்களை வென்றது அர்ஜுனன். இது கங்கபட்டருக்குத் தெரியுமாதலால் அவர் விராடனை நோக்கி நகைத்து, "உத்தரன் கௌரவர்களை வென்றது உண்மையானால் அதனை அற்புதமென்றே சொல்லவேண்டும். பிருகந்நளையை (அர்ஜுனனை) ஸாரதியாகப் பெற்றவனுக்குத் தோல்வி எப்படி யுண்டாகும்?- என அர்ஜுனனுக்கு ஏற்றந்தந்து பேசினார்.



விராடன் இதைக் கேட்டதும் துக்கமடைந்து, "கங்கபட்டரே, நான் அநேகவீரர்களையும் ஸாரதியையும் பார்த்திருக்கிறேன், பராக்ரமத்துடன் போர் புரியவல்ல ஸாரதியைப் பார்த்ததில்லை. அரசர்களுக்கு விருப்பமில்லாததைச் சொல்வதும் செய்வதும் தகாதன என்பதை நீர் ஏன் அறியாமற் போனீர்? அரசர்களுக்குப் பிரியமில்லாததைச் செய்கிறவன் ஒருபோதும் சுகமடையமாட்டான். நீர் சிநேகர். ஆகையினால் இப்படிப்பட்ட உமது குற்றங்களைப் பொறுத்தேன்" என்றான்.

கங்கபட்டர்-"இதைக் கேட்டதும் நகைத்து, "வேந்தே, இன்னமும் சொல்லுகிறேன். பிரகந்நளை தான் ஜயித்திருக்க வேண்டும். உத்தரன் ஸாரதியாயிருந்திருப்பான். இதில் சந்தேகமில்லை. என்புத்திக்கு இதுதான் உதயமாகிறது. கௌரவர்களை வெல்ல உத்தரனால் முடியாது" என்று கூறினர்.

விராடன், "கங்கபட்டரே, ஏன் வீண்பேச்சுப் பேசுகிறீர்? எனக்கு விரோதமான பேச்சைப்பேசுவது கூடாதென்று தெரிவித்தும் நீர் பிடிவாதமாய்ப் பேசுகிறீர்? ஆள்கிறவனிருந்தாலன்றி ஒருவனும் தருமத்தை அநுசரிக்கமாட்டான்" என்று கூறிச் சினங்கொண்டு தன்கையிலிருந்த பாச்சிகையை அவர் முகத்தில் விட்டெறிந்தான். "இனி இப்படிப்பட்ட வார்த்தை பேசாதேயும்" என்று உறுத்தான். அடி-

பலமாகப்பட்டுவிட்டபடியால், தர்மபுத்திரரின் முகத்தில் காயமுண்டாய் அதிலிருந்து இரத்தம் பெருகத் தொடங்கியது. தருமபுத்திரர் அந்த இரத்தம் பூமியில் விழாதபடி கைகளினாலே தடுத்தார். வண்ணப்பெண் வடிவத்துடனிருந்துவரும் திரௌபதி அச்சமயம் அருகிலிருந்தபடியால், அவள் விரைவில் தன் முன்தானையால் இரத்த்தைத் தடுத்துக் கொண்டாள்.

இவைகளைக் கவனித்த விராடன் தான் கோபங் கொண்டது தவறென்றுணர்ந்து மனம் வருந்திய வண்ணமிருந்தான்; திரௌபதியைப் பார்த்து, "சைரந்திரி, இரத்தத்தை உத்தரீயத்தில் ஏந்திக் கொள்கிறாயே இதற்குக் காரணம் என்ன?" என்று கேட்டான்.

சைரந்திரி, "இந்தமகானுடைய இரத்தத்தில் எத்தனை துளிகள் பூமியில் விழுகின்றனவோ அத்தனை வருஷம் வரையில் உமது நாட்டில் மழைபெய்யாது. அப்படிப்பட்ட தீங்கு உமக்கு உண்டாகாம லிருப்பதற்காக இவருடைய இரத்தத்தை நான் உத்தரீயத்தில் ஏந்தினேன். யதீசுவரருக்குத் துன்பத்தை உண்டாக்குகிறவன் அற்பாயுளை அடைவான். யதீசுவரர்களை நோக்கிக் கட்டளையிடுகிறவன் யமலோகத்தில் ஆயிரம் வேதனைகளை அடைவான்" என்றாள்.

விராடன் இதைக்கேட்டதும் பெருவிசனத்திலாழ்ந்து-"கோபம் கொடிது. கோபம் மனிதனை நரகத்தில் வீழ்த்தும் என்பதில் ஐயமில்லை. தெரியாமலா பெரியோர்கள். 'ஆறுவது சினம்' என்றும் 'சினத்திருந்தார் வாசல்வழி சேரவேண்டாம்' என்றும் கூறு



சைரந்திரி கங்கபட்டரின் நெற்றியினின் றொழுகு மிரத்தத்தைத் தடுப்பது. ப. 361.

கின்றனர்'' என்று கருதி வருந்தினன். முன்கோபக்கா ரர்களிற் பெரும்பான்மையர் இவ்வாறு தாங் கள் கோபங்கொண்டது மதியீனமென்றெண்ணிவருந் துவர். புத்திசாலிகள் ஒருபோதும் கோபத்திற்கிடந் தர மாட்டார்கள்.

விராடன் இவ்வாறிருக்கையில் காவலர் சிலர் வந்து, "மகாராஜாவே, உமதுபுத்திரன் பகைவர்களை வென்று ஸாரதியுடனும் கடல்போன்ற சேனைக ளுடனும் நகர வாயிலில் வந்திருக்கிறார்'' என்றார்கள். வேந்தன், "நான் அவர்களைக் காண விரும்புகிறேன். சீக்கிரத்தில் அழைத்துவாருங் கள்'' என்றான். கங்கபட்டர் காவலாளிகளைப் பார்த்து "உத்தரனை மாத்திரம் வரவிடு. பிரகந்நளை வரவேண் டாம். யுத்தகாலந்தவிர மற்றகாலத்தில் என் தேகத் தில் இரத்தம் வரும்படி செய்தவன் அல்லது காயப் படுத்தியவன் எவ்விதத்திலும் ஜீவித்திருக்கமாட் டான். பிரகந்நளை என்னை இந்நிலையிற் கண்டால் எனக்குத் தீங்கிழைத்தவன் இந்திரனாகவிருந்தாலும் விடமாட்டாள். கொன்றே தீருவாள். ஆகையினால் அவள் க்ஷணநேரம் வாயிலிலேயே நிற்கட்டும்'' என்று கூறி அனுப்பினன்.

காவலாளிகள், அப்படியே எனப்பகர்ந்து வெளி யே சென்ற உடனே-உத்தரன் வந்து தந்தையைப் பணிந்தான்; பின்கங்கபட்டரைப் பணிந்து எழுந்து சைரந்திரி அவருக்கு உபசரணை செய்வதைக் கண்டு

"இப்படிப்பட்ட சிகித்ஸை ஏன் இவருக்கு? காரண மென்ன?— எப்படி அடிப்பட்டது?" என்று கேட்டுப் பின், "இவரை யாரோ அடித்திருப்பதாகத் தெரிகிறது' அடித்தவன் யாவன்? இந்தப் பாவத்தை எவன் செய்தான்? எவன் எமனையடைய விரும்பியிருப்பவன்? வணங்கத்தக்கவரும் இந்திராசனத்தில் வீற்றிருக்கத் தக்கவருமாகிய இவருக்கு ஊறு செய்தவனும் தப்புவானோ?" என்று கடுங்கோபங் காட்டினான். விராடன் உடனே மைந்தனை யழைத்து, "இவர், தகுதியற்ற பேச்சுப் பேசியபடியால் இவரை நானே அடித்தேன். நான் உன்னைப் புகழ்ந்து பேசினேன். இவர் பிரகந்நளையாகிய பேடியைப் புகழ்ந்து பேசினார். அதனால் நான் சினங்கொண்டு அடித்தேன்" என்றான்.

உத்தரன், தந்தையைப் பார்த்து, "நீர் செய்யத் தகாததைச் செய்து விட்டீர். நாம் பிருகந்நளையின் கோபத்துக் காளானோம். இனி என்ன செய்வது?" என்று பயந்தான். விராடனும், பயந்தான். அப்போது, உத்தரன், 'இந்த மகான், தமது வலக்கரத்தால் உம்மைத் தொட்டு நான் உம்மை மன்னித்தேன்' என்று கூறுகிறவரையில் இவர் காலில் விழுந்து பணிந்து வேண்டிக்கொள்ளும்" என்றான். விராடன் மறுக்காமல், பிராமண வேஷத்துடனிருக்கிற தரும புத்திரரைப் பணிந்து "என் பிழையைப் பொறுத்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்தான்.

தருமபுத்திரர், பொறுமையே மானிட உருவங் கொண்டதோ எனப் பேசிப் புகழத்தக்க மேன்மை



யுடையவ ராகையினால் விராடவேந்தனைப் பார்த்து, "நான் எப்போதும் பொறுமையையே வகித்திருப்பவன். எனக்குக் கோபமே கிடையாது. நான் எனக்குத் துன்பஞ் செய்தவனுக்கும் துன்பம் செய்வதில்லை. ஆனால் அதன் பயனை அவன் உடனே அடைவான்" என்று கூறினார்.

இச்சமயத்தில் பிரகந்நளையாகிய அர்ஜுனனும் அங்கேவந்து சேர்ந்தான். விராடன் மைந்தனை அழைத்து—போர்நடந்த விவரத்தை யெல்லாம் கேட்க, உத்தரன், "என்னால் ஒன்றும் செய்ய இயலவில்லை. ஒரு கந்தர்வன் எனக்குத் துணையாக நின்றான். அவனாலேதான் நான் கௌரவர்களை வென்றேன். அவனில்லையானால் நான் உயிர்தப்பி வந்திருக்கமுடியாது. கடவுள் அவனைத் துணையாகத்தந்து மானத்தைக் காப்பாற்றினார்" என்றான்.

விராடன்கேட்டு வியப்புற்று "அந்தக் கந்தர்வன் எங்கே? அவனைக்கண்டு பூஜிக்க விரும்புகிறேன்" என்றான். உத்தரன், அந்தக் கந்தர்வன், நமக்குச் செய்யவேண்டிய உதவியைச் செய்துவிட்டு உடனே மறைந்து விட்டான். இன்றைக்காவது நாளைக்காவது மீண்டும் வருவான்" என்றான்.

பிரகந்நளையாகிய அர்ஜுனன் இச்சமயம் உத்தரனிடம்வந்து இரகஸ்யமாய் "இப்படியே யுதிஷ்டிரரிடமும் சொல்" எனக்கூறிவிட்டுத் தருமபுத்திரரிடம் போனான். அப்போது அங்கே பீமசேனனிருந்தான். அர்ஜுனன் அவரைப் பார்த்து, "என் தர்மபுத்திரர்

முகத்தை மூடிக்கொண்டிருக்கிறார்?” என்று கேட்டான். தர்மபுத்திரர், “நான் உன் பராக்கிரமத்தைப் புகழ்ந்து பேசினேன், அது பொறாமல் விராடன் என்னைப் பாச்சிகையினால் அடித்தான், இரத்தம் பெருகக் காயமுண்டாய்விட்டது. இரத்தம் பூமியில் விழக்கூடாதென்பதுகருதி முகத்தை மூடிக்கொண்டிருக்கிறேன். நாம் சுகமாக வசித்த பூமிக்குத் தீங்குண்டாக்குவது கூடாதல்லவா? ஆகையினால் கோபத்தை அடக்கிக் கொண்டிருந்தேன். நீ கோபங்கொள்ளாதே! கோபங்கொண்டால் விராடன் நன்மை யடையமாட்டான். உன்புஜபலபராக்ரமத்தை அவனறிய மாட்டானதலால் உன்னைப் புகழ்ந்ததை அவன் பொறுக்கவில்லை” என்றார்.

இப்படி தருமபுத்திரர் கூறியபின்னும் அர்ஜுனன் கடுங்கோபங் கொண்டான். அதுகண்ட பீமசேனன், “ஒருவன் எப்போதும் பொறுமையுடையவனாக இருப்பது கூடாதென்று அறிஞர் பெருமானாகிய பிரஹஸ்பதி கூறுகிறார். பொறுமையுள்ளவன் விஷவீரியமில்லாத ஸர்ப்பத்தைப்போல் உலகத்தில் எல்லோராலும் அலட்சியம் செய்யப்படுகின்றான். இந்த விராடன் நமக்கு உதவி செய்துள்ளானென்றாலும் இவனுக்கு நல்லறிவில்லை. பாஞ்சாலியின் சம்பந்தமாய்க் கீசகன் தீங்கு செய்தபோது இவன் அவனை அடக்கித் தண்டிக்கவில்லை. இவன் அரசனா யிருக்கத் தக்கவல்லன். இவனை எதிர்த்து அமர்செய்து இவனைவென்று இந்த அரசை அண்ணாவுக்குத் தருவதே நியாயம்” என்றான்.



தருமபுத்திரர் அவர்களிருவருடைய கோபத்தையுமடக்கி, நாம் நாளையதினம் வெளிப்பட்டு இராஜ அலங்காரத்துடன் இராஜஸிம்மாஸனத்தில் அமர்ந்திருப்பாம். அப்போது விராடன் நமக்குத் தக்கமரியாதை செய்யாமற் போவானானால் நாம் பின்னே நமதிச்சைப்படி நடப்போம்” என்று கூறிச் சமாதானப்படுத்தினார்.

பின் மறுநாள் ஐவரும் இராஜ கோலத்துடன் வெளிப்பட்டு அரண்மனையில் இராஜஸிம்மாஸனத்தில் வந்து அமர்ந்திருந்தனர். அப்போது அங்கேவந்தவிராடன் அவர்களை இன்னாரென்று பாராமல் மயங்கினான்; தர்மபுத்திரரைமாத்திரம் கங்கபட்டரென அறிந்துகொண்டானதலால், “பாச்சிகையை உருட்டுகிற நீர் இராஜாஸனத்திலுட்கார்ந்திருக்கக் காரண மென்ன?” என்று கேட்டான்.

அப்பொழுது அர்ஜுனன் எழுந்து, “இவர் இந்தச் சிங்காதனமல்ல. இந்திரனுடைய சிறந்த சிங்காதனத்திலும் வீற்றிருக்க யோக்யமானவர்! கௌரவர்களுக்குள்மேலானவர்! குந்திபுத்திரரானதர்மபுத்திரர்” என்றான்.

விராடன் கேட்டதும வியப்படைந்து, “இவர் தருமபுத்திரரானால் பீமசேனன் முதலியவர்கள் யாவர்?- திரௌபதி யாவள்? என்றுகேட்டான். அர்ஜுனன் பீமன் நகுலன் சகாதேவன், திரௌபதி இவர்களை இன்னாரென அரசனுக்குச் சொன்னான். பீமசேனன், பிரகந்நளைதான் அர்ஜுனன் என்று

அர்ஜுனனை வெளிப்படுத்தினன். உடனே விராடன் தர்மபுத்திரை வணங்கியெழுந்து, "ராஜேந்திர வேஷத்துடன் மறைந்திருந்தபடியால் நான் தங்களைத் தெரிந்துகொள்ளாது, என்னுடைய அறியாமையினுல் சாமான்யர்களிடம் செய்வதுபோன்ற அவமதிப்பான செய்கையைச் செய்து விட்டேன். பொறுத்தருளவேண்டும்" என வேண்டிக்கொண்டான்; "இந்த ராஜ்யம் செங்கோல் பொக்கிஷம் யாவும் உம்முடையவைகளே. உம்மைச் சரணமடைந்தேன்"-என்ருன்.

தருமபுத்திரர் சகல நீதி சாஸ்திரங்களையும் உணர்ந்த பெரியவரானதால், அவனை மன்னித்து அவனை வீற்றிருக்க உபசரித்து அவனுக்குச்சொல்ல வேண்டிய நீதிகளை எடுத்துக்கூறி அவனைக்கௌரவப்படுத்தினர். இதோடு அக்ஞாதவாசகாலம் நீங்கியபடியால் தருமபுத்திரர் கௌரவர்களுக்குத் தூதனுப்பிப் பின் போரில் துரியோதனுதியரை வென்று தங்கள் அரசுரிமை பெற்றுச் சுகமாயிருந்தார்கள்.

கோபம்பொல்லாதென்பதையும் கோபம் கொள்ளும் சுபாவமுடையவன் முடிவில் விராடனைப்போல் முடிதாழ்த்தி மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும்படியான நிலைமைக்கு வருவானென்பதையும் பொறுமையுடையவன் தருமபுத்திரரைப்போல் பெருமையடைவானென்பதையும் இந்த வரலாறு நமக்குணர்த்துகிறபடியால் கோபத்தை அடியோடுவிட்டு விடவேண்டும். அதனை நமக்குப் பெரிய பகையெனக் கருத வேண்டும்-என்றுணர்வோமாக.

## கடவுளே கதி

(மாயக்கூத்தன் எழுதியது)

ஸ்ரீ கிருஷ்ண பகவான் பகவத் கீதையை அர்ஜுனனுக்கு உபதேசித்து முடிவிலே "எல்லா அறங்களையும் அறவே துறந்து என்னை ஒருவனையே கதியெனக் கொள்வாய்; நான் உன்னைச் சகல பாபங்களினின்றும் விடுதலை செய்கின்றேன்; வருந்தாதே" என்று உறுதி கூறினர். ஆகவே, பிறவித்துன்பங்களை ஒழிக்க விரும்பினுல், பாபங்கள் நம்மைப்பற்றி மேன்மேலும் பிறந்து வருந்தும்படி செய்விப்பதற்கு இடந்தாக்கூடாது என்று கருதினுல், நாம் அனைவரும் கடவுளையே கதியாகக்கொண்டு வாழவேண்டும். ஈச்வரனுடைய நற்றாளைத் தொழுவதே நாம் கற்ற கல்வியின் பயனுகும் அன்றே? நமக்கு உய்விடம் ஈசனது பாதாரவிந்தமே யாகும். அவனுடைய அடியை அடைந்தவரே "நிலமிசை நீடுவாழ்வார்." அவ்வகையினேரின் இடும்பைகள் எல்லாம் தீர்ந்துபோம்; அவ்வாறு ஈசனது தாள் சேர்ந்தால் அல்லது மனக்கவலைகளை மாற்றல் அரிது.

இவ்வாறு பிறவிப் பெருங்கடலை நீந்துவோருக்குப் புணையாக உள்ளது இறைவனது திருவடி என்பதையும் அதைத்தவிர வேறு புணையில்லை என்பதையும் "ஈசனையே கதியாகக்கொண்டு நான் வாழ்வேன்"

என்பதையும் குலசேகர ஆழ்வார் பத்துப்பாடல்களாலே நன்கு விளக்கியுள்ளார். இந்தப் பாடல்கள் "வித்வக்கோடு" என்னும் ஊரிலே கோயில்கொண்டு அமர்ந்துள்ள திருமாலைக் குறித்துப் பாடப்பட்டுள்ளன.

தருதுயரம் தடாயேல் உன் சரணல்லால் சரணில்லை
விரைகுழுவும் மலர்ப்பொழில்சூழ் வித்வக்கோட்டம்மானே
அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன்
அருள்நினைந்தே அழுங்குழவியதுவே போன்றிருந்தேனே

இதன் பொருள் :—பரிமளம் மிகுந்த பூஞ்சோலைகளாலே சூழப்பட்ட வித்துவக்கோட்டிலே அமர்ந்த பெரியோனே ; நீ தந்த துயரத்தை நீ போக்காய்! ஆனாலும் உன்னுடைய சரணமே எனக்குச் சாருகும் வேறு சரணம் இல்லை ; பெற்றெடுத்த தாயார் கோபித்துக்கொண்டு தன் குழந்தையைக் கைவிட்டாலும் அந்தக் குழந்தை அவளுடைய அருளையே நினைந்து அழுதுகொண்டு கிடக்கும் அன்றோ ?

இந்தப் பாட்டாலே உயிர்கள் அனைத்தும் ஒரு பெரும் தெய்வத்தின் குழந்தைகள் என்பதையும் அவையெல்லாம் தெய்வத்தின் அருளையே கதியாக உடையன என்பதையும் அவ்வருளும் தெய்வத்திற்கும் உயிர்களுக்கும் உள்ள 'சம்பந்தத்தாலே அந்த தெய்வம் தானே கொடுப்பது என்பதையும் அவ்வாறு அவன் அருள் பாலிப்பதிலே தாமதம் செய்தாலும் அவனுடைய அருளையே நினைந்து வேறு கதி யில்லை என்பதை உணர்ந்து கிடப்பதே நமது கடமை என்பதையும் ஆழ்வார் விளக்குகின்றார். இதுபோலவே அழகாய் அமைந்த வேறு பல உதாரணங்களாலே ஆழ்வார் தாம் கடவுளையே நம்பியிருப்பதை நன்கு விளக்குகின்றார்.



ஒரு பதிவிரதையானவள் தன் கணவனைத்தவிர வேறு கதி ஒன்று உண்டு என்று நினைப்பாளோ ? அந்தக் கணவன் கண்டவர் இகழும்படியாகக் கேவலமாய் நடந்துகொண்டாலும் தன்னை மனைவியாகக் கொண்டு ஆளாவிட்டாலும் அம்மனைவி அவனுடைய பாதங்களையே நம்பிக் காத்திருப்பாள் அல்லவா ? இதைத் தம்முடைய நிலைமைக்கு ஒரு சிறந்த உதாரணமாகக் காட்டுகின்றார் குலசேகராழ்வார்.

கண்டா ரிகழ்வனவே காதலன்தான் செய்திடினும்
கொண்டானை அல்லால் அறியாக் குலமகள்போல்
விண்தோய் மதிள்புடைசூழ் வித்துவக்கோட்டம்மானே நீ
கொண்டாளாயாகிலும் உன் குரைகழலே கூறுவனே

ஈசன் நம்மேல் அருள்கொண்டு நோக்காமல் அசட்டை செய்தபோதும் அவனையே பற்றிக்கொண்டு இருப்பது அல்லாமல் வேறுபற்று ஒன்றைக் கொள்வோம் என்பதற்கு இடமில்லை. அரசனுடைய செங்கோலை நோக்கி வாழ்கின்ற குடிஜனங்களை அவ்வரசன் தன் தொழிலை மறந்து பிரஜைகளைக் காத்து ரக்ஷியாமலிருந்தாலும் அவன் மறுபடியும் தன் கடமையை உணர்ந்து நம்மை ரக்ஷிப்பான்

என்று பொறுமையுடன் காத்திருப்பர்; அவனை நீத்து அராஜகமான நாட்டிலே வாழமாட்டார்கள். இவ வுண்மையையும் தமது பக்தியின் நிலைக்கு ஒரு உதாரணமாகக் காட்டும் குலசேகராழ்வார்,

மீன்நோக்கும் நீள்வயல்சூழ் வித்துவக்கோட்டம்மான், என்
பால் நோக்காயாகிலும் உன் பற்று அல்லால் பற்று இலேன்
தான் நோக்காது எத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்
கோல்நோக்கி வாழும் குடிபோன்று இருந்தேனே

இதுவரையும் இறைவன் தம்மைக் கஷ்டங்களுக்கு ஆளாக்கியது அவனுடைய அருளைத் தமக்கு அளிப்பதற்குத் தாமதப்பட்டதாலே என்று கருதிப் பாடினார் ஆழ்வார். அடுத்த பாட்டிலே இறைவன் நமக்குத் துன்பங்களை விளைத்ததும் அருள்கொண்டு செய்த செய்கைபோலும். மருத்துவன் நோயாளனை வாளால் அறுத்துச் சுடுகின்றான்; அவ்வாறு நோயாளனைத் துன்புறுத்துவதும் அவனுடைய நன்மையைக் கருதியே யன்றோ? அதுபோலவே நாம் படும் துன்பங்களெல்லாம் இவ்வாறு இறைவனாலே செய்யப்படும் வைத்தியத் தொழில்களே யாவன. ஆகவே,

வாளால் அறுத்துச்சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல் நோயாளன்போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக்கோட்டம்மானே நீ
ஆளாய் உனதருளே பார்ப்பன் அடியேனே

கப்பலின் பாய்மரத்திலே வாழும் பறவை, நடுக் கடலிலே கப்பல் செல்லும்போது வேறு எங்கு



சென்று தங்கமுடியும்? அதுபோலவே ஸம்ஸார சாகரத்திலே உழலும் உயிருக்கு இறைவனே புகலிடமாகும். இதை விளக்கவே, ஆழ்வார்,

வெங்கண்திண் களிறடர்த்தாய்! வித்துவக்கோட்டம்மானே
எங்குப்போய் உய்கேன்; உன்இணையடியே அடையிலல்லால்
எங்குப்போய்க் கரைகாணாது எறிகடல்வாய் மீண்டோம்
வங்கத்தின் கூம்புஏறும் மாப்பறவை போன்றேனே

இந்தப் பாடல் இறைவனுடைய மன்னிப்பை நாம் கேட்பதாகவும் அமைந்துள்ளது. வங்கத்தின் கூம்பிலேயுள்ள பறவை அதைவிட்டு நீங்க நினைத்துக் கடலிலே நாற்புறமும் பறந்து அலைந்து எங்கும் கரை காணாது தவித்து இறுதியில் முன் இருந்த கூம்பே கதியென்று மீள்கின்றது. அதுபோல நாமும் இறைவனை மறந்து வேறுகதிகளை நாடித் திரிகிறோம்; ஆயினும் இறுதியில் அவனே கதியென்று உணர்ந்து மீண்டும் அவனைச் சரண் புகுகிறோம். அவ்வாறு புகும்போது நாம் வேறுகதி நாடிச் சென்றதை அவன் பொருட்படுத்தாது அருள்புரியவேண்டும் என்பது குறிப்பாக உணர்த்தப்பட்டது.

இவ்வாறு கடவுளையே கதியாக நாம் கொள்கின்றோம் என்பதில் நமக்கு யாதொரு பெருமையும் இல்லை. இது இயல்பேயாகும். என்பதை அடுத்த பாட்டாலே ஆழ்வார் குறிக்கின்றார். உன்னுடைய பெருமையை நினைந்து உன்னையே புகழ்ந்து மன மிளகி உருகுவதும் உன்னுடைய அருளையே எதிர்

பார்த்து ஏங்குவதும் இன்றி நான் வெறுமனே இருத்தல் இயலாது. தாமரைக் கொடி தன்னை வெயிலாலே வருத்தும் சூரிய கிரணங்களைக் கண்டதும் மலருவது போலவே நானும் என்ன துயரங்கள் நேர்ந்தபோதும் உன் அருளைக் கருதி அகங் குழைவேன் என்கிறார் ஆழ்வார்

செந்தழலே வந்து அழலை செய்திடினும் செங்கமலம்
அந்தரஞ்சேர் வெங்கதிரோற் கல்லால் அலராவால்
வெந்துயர் வீட்டாவிடினும் வித்துவக்கோட்டம்மானே! உன்
அந்தமில் சீர்க்கல்லால் அகம்குழைய மாட்டானே

இறைவனது கருணை மேகம் பொழிகின்ற மழை போன்றது. மழையைப்பெய்வித்தல் நம்மால்இயலாது. நம்மால் செய்யக்கூடியது "பணி செய்து கிடப்பதே யாம்''

தனக்கடிமைபட்டது தான் அறியானேலும்
மனத்தடையவைப்பதாம் மாலை-வனத்திடரை
ஏரியாம் வண்ணம் இயற்றுமிது வல்லால்
மாரியார் பெய்கிற்பார் மற்று

நாம் வனத்திடருக்குக் கரை கட்டி அதை ஏரியாக அமைத்துக்கொண்டால் அவனுடைய அருள் பொழியும்போது அதைப்பயன் படுத்த முடியும். இறைவனாகிய மேகம் அருள்மழை பெய்யாவிடினும் பயிர்கள் ஆகாசத்தை நோக்கி மழையை எதிர்பார்த்து வாடும். அதுபோலவே பக்தன் இறைவனிடம்



சித்தத்தைச் செலுத்தி வைப்பான்

எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள்
மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும் மற்றவைபோல்
மெய்த்துயர் வீட்டாவிடினும் வித்துவக் கோட்டம்மான் என்
சித்தம் மிகஉன்பாலே வைப்பன் அடியேனே.

நீர் ஆறுகளில் ஓடியும் குளம் ஏரி இவற்றிலே தங்கியும் சென்று இறுதிலே சாகரத்தையே அடைகின்றது. அதுபோலவே உயிர்கள் எங்குச் சென்றாலும் கடைசியிலே ஈசனிடமே சேரும் இயல்பை உடையன. அவனன்றி வேறு புகல் இல்லை. அவ்வாறே ஆழ்வாரின் பக்திக்கும் இறைவனே பாத்திரமாகின்றனன்:—

தொக்கு இலங்கு யாறெல்லாம் பரந்தோடித் தொடுகடலே
புக்கு அன்றிப்புறம் நிற்கமாட்டாத மற்று அவைபோல்
மிக்கு இலங்குமுகில் நிறத்தாய் வித்துவக் கோட்டம்மான் உன்
புக்குஇலங்குசீர் அல்லால் புக்கு இலன்காண், புண்ணியனே

இதிலும் சிறந்த ஓர் உதாரணத்தால் இப்பாடல்களை முடித்துக்கூறுகின்றார் ஆழ்வார்-அதாவது செல்வம் என்பது தன்னைவேண்டாது ஈசனையே வேண்டுகிற அவனைப்பின் தொடர்கின்றது. அதுபோலவே பக்தனும் தன்னை வேண்டாத ஈசனைப்பின் தொடர்கின்றான். இவ்வாறு இறைவனை நோக்கி ஈசா நீ என்னைப் பொருட் படுத்தாதிருப்பினும் உன் அருளை எனக்குத் தரமறுத்தாலும் நான் உன்னையே பின்பற்றுவேன் என்று தம்முடைய மனத்துணிவை வெகு சாதுரியமாக விளக்கிக் காட்டுகின்றார் குலசேகரப் பெருமான்.

நின்னையேதான் வேண்டி நீள்செல்வம் வேண்டாதான்
தன்னையே தான் வேண்டும் செல்வம்போல், மாயத்தால்
மின்னையே சேர்திகிரி வித்துவக்கோட்டம்மான் !
நின்னையே தான் வேண்டி நிற்பன் அடியேனே.

இவ்வாறு மற்று ஆரும் பற்று இலேன் என்று இறைவனுடைய தாளிணையை நயந்து அருளிய பெருமாள் திருமொழியிலே உயிர் வகைகளுக்கு அவற்றைப் படைத்துக் காக்கும் இறைவனுடைய பதாரவிந்தங்களே கதி என்னும் உண்மை பல சிறந்த உதாரணங்களாலே நன்கு விளக்கப்பட்டுள்ளன. அவை பெரிதும் பாராட்டற்குரியன வாகும்.

---

## மகாலட்சுமிக்கும் பார்வதிக்கும் வாக்குவாதம்

(முன் தொடர்ச்சி)

பார்—தந்தவக்ரன் துரத்த தளர்ந்தோடி மலைக்குகையில்
வந்தொளித்த தென்ன இதை வழுத்துவாய் திருவே
திரு-வைக்கோலுங் கொள்ளுந்தின்னும் மாட்டின்மேலேறுவது
தக்கதோ எனக்கறியச் சாற்றுவாய் உமையே
பார்—நத்தை நண்டு தின்று தினம் நாள்கழிக்கும் கருடன்மேல்
உத்தமமோ ஏறுவதிங் குரைச்செய்வாய் திருவே
திரு—உடுக்கத் துணியில்லாமல் உறுபுலியின் தோலதனை
இடைக்கணிந்ததென்ன குறை இயம்புவாய் உமையே
பார்—புரம் விடுத்து வனஞ்சென்ற போது ரகுபதி யிடையில்
மரவுரியைத் தரித்ததென்ன வழுத்துவாய் திருவே
திரு—படிமீதிருக்க ஒரு பாழ்வீடு கிடையாமல்
சுடுகாட்டிலிருப்பதென்ன சொல்லுவாய் உமையே
பார்—படுக்கவொரு மஞ்சமும் பாயும் வழியில்லாமல்
நடுக்கடலிற் படுத்ததென்ன நவிலுவாய் திருவே
திரு—சந்தனஞ் சவ்வாதிருக்கத் தான் தரிக்கமாட்டாமல்
அந்திசந்தி சாம்பல் தன்னை அணிந்ததென்ன உமையே

(வரும்)

## தைரியம் தலைகாக்கும்

910777

---

ஓர் ஊரில் ஒரு பணக்காரனிருந்தான். அவன் பெயர் – சங்கரலிங்கம். சங்கரலிங்கம் – பணக்காரனாயிருந்த போதிலும் தன் தேகத்தில் வெயில், காற்று, மழைபடும்படி வெளியே அடிக்கடிபோய் உலாவுவான். தன்னுடைய வயல் வேலைகளைச் சோம்பலில்லாமல் கவனித்து வருவான்; தன் வேலைக்காரர்களை அன்பும் ஆதரவுமாய் நடத்துவான்; நினைத்த பொழுதெல்லாம் உணவு உண்ணமாட்டான். கண்ட தீனிகளையும் தின்னமாட்டான்; கண்டவிடத்தில் மிருகங்களைப் போல குளிக்காமலும் முழுகாமலும் அநுஷ்டானம் முடிக்காமலும் உண்ண மாட்டான். அவன் சதா சார சீலனெனப் பெயர் வாங்கியதுமல்லாமல் புஜபல பராக்ரமமுடையவனாகவும், விளங்கினான்.

இப்படிப்பட்ட நல்ல நிலைமையிலிருந்த சங்கரலிங்கம் ஒருநாள் தைரியமாய் ஒரு கிராமத்துக்குச் சென்றான். இவன் எப்போது ஊர்ப்பிரயாணம் புறப்பட்டாலும் கையில் துப்பாக்கி யில்லாமல் புறப்படமாட்டான். வழக்கம்போல் இவன் இன்றும் துப்பாக்கியுடன் புறப்பட்டுச் சென்றான். இவனிடத்தில் இன்னொரு வழக்கமும் உண்டு. இவன் ஐந்தாறு கல் தூரத்திலுள்ள ஊர்களுக்கெல்லாம் கால் நடையாகவே புறப்பட்டுப் போய்த் தன் வேலையைத்தானே கவனித்து வருவான்.

இன்று இவன் தன் வண்டியில் புறப்பட்டுச் சென்றானாகையினால், ஊரைக் கடந்து இரண்டு கல் தூரம் போய் ஒரு காட்டைக் கடக்கையில் ஒரு திருடன் ஒரு குதிரையின்மேல் வந்து வண்டியை மடக்கி அதன் பலகணியின் பக்கம் நின்று துப்பாக்கியை நீட்டிப் பயமுறுத்தி, "உன்னிடமிருக்கும் பொருள் ஆபரணம் எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு மரியாதையுடன் செல். இல்லாவிட்டால் இன்று இந்தத் துப்பாக்கிக்கு இரையாவாய். நிச்சயம் என்றான்.

சங்கரலிங்கம் முதலில் பயந்தவன்போல் பாசாங்கு செய்து ஆபரணங்களைக் கழற்றிவைத்துப் பின் பெட்டியைத் திறந்து அதில் கையை விட்டுப் பணத்தை எடுப்பதுபோல் காட்டிக்கொண்டேயிருந்து—"அதோ பாவி உனக்குப் பின்புறம் இருக்கிறானே. அவன் என்னை இந்தக் காட்டுவழியாக அழைத்து வந்தான். அதனாலேதான் நான் இந்த ஆபத்தில் அகப்பட்டுக்கொள்ள வேண்டியதாயிற்று. பாவி கெடுத்தான்.! அவன் உன்னைச் சேர்ந்தவனாகத்தா னிருக்கவேண்டும். இல்லாமல் வேறொருவனா யிருந்தால் இப்படிப்பட்ட மோசம் செய்யமாட்டான்" என்றான்.

இப்படிச் சொல்லவே திருடன் சங்கரலிங்கத்தின் பேச்சை உண்மையென நம்பிப் பின் பக்கம் திரும்பிப் பார்த்தான். இச்சமயம் பார்த்து, சங்கரலிங்கம் தன் கைத் துப்பாக்கியை யெடுத்துப் படீரென்று சுட்டு அவனை வீழ்த்திவிட்டுத் தப்பித் தன்வழியே வண்டியை வேகமாகச் செலுத்திக்கொண்டு சென்று தான்



போகவேண்டிய ஊர்போய்ச் சேர்ந்து தான் செய்த தந்திரத்தைப் பலருக்கு எடுத்துக்கூறி ஆனந்தமடைந்தான்.

இவனை இச்சமயம் காப்பாற்றியது எது?—தைரியமும்-சமயோசிதமான தந்திரம் செய்யத்தக்க சமர்த்தியமே யாகையினால் எப்படிப்பட்ட ஆபத்து நேர்ந்தாலும் தைரியத்தை இழக்காமல் எந்த யுக்தியினாலாவது ஆபத்திலிருந்து தப்ப வழிதேட வேண்டும். தைரியத்தை இழந்தால் மனத்தில் எந்தவிதமான யுக்தியும் தோன்றாது. ஆபத்தில் அகப்பட்டுக்கொண்டு அல்லலடைய நேரிடும். இப்படி அநேகர் ஆபத்துக் காலத்தில் தக்க யுக்தியினால் தப்பிக் கொண்டிருக்கிறார்கள். பெண்பிள்ளைகளிலும் பலர் இப்படிப்பட்ட சாமர்த்தியம் செய்திருக்கிறார்கள்.

ஓர் ஊரில் ஒரு நாள் இரவில் ஒரு வீட்டுக்குத் திருடர்கள் வந்து சுவரில் கன்னம்வைத்து உள்ளே நுழையப் பார்த்தார்கள். திருடர்கள் கன்னம்வைத்தால் முதலில் ஒருவன் அக்கன்ன வாசல்வழியே காலை விட்டு, வீட்டுக்குள் யாரேனும் கன்னவாசலுக்குச் சமீபமா யிருக்கிறார்களா என்று பார்ப்பது வழக்கம். அப்படியே இன்றும் ஒரு திருடன் தன் காலைக் கன்ன வாசல் வழியே நுழைந்தான்.

இதற்குமுன் அதாவது கன்னம் வைக்கத் தொடங்கும்போதே அவ் வீட்டுக்காரி விழித்துக்கொண்டபடியால் அவள் கூக்குரல் போடாமல், அவ்வாசலுக்கருகே ஒரு பெரிய கயிற்றையெடுத்துச் சுருக்கு முடி

யிட்டுக் கையில் வைத்துக்கொண்டு தலையையோ காலையோ நீட்டினால் கட்டிச் சுருக்கிட்டுப் பிடித்துக் கொள்வதென்று தைரியமாய்க் காத்திருந்தாள். திருடன் காலை விட்டதும் துளாவினான். அம்மாது ,'நல்லது'' என்று மனமுவந்து தைரியமாய் அவன் காலில் கயிற்றைச் சுருக்கிட்டு இழுத்து அங்கிருந்த ஒரு ஸ்தம்பத்தில் கட்டிவிட்டாள். திருடன் என்ன செய்வான். தன்னாலியன்ற வரையில் இழுத்துப் பார்த்தான்; விடுவித்துக்கொள்ள முடியாமல் தவித்தான். அதுகண்ட அம்மாது "திருடன்! திருடன்" எனக்கூவினாள். இப்போது வெளியே திருடர்கள், "ஓகோ இவன் அகப்பட்டுக் கொண்டான். தப்பவழியில்லை. இவன் உயிரோடிருந்தால் நம்மை வெளியிட நேரிடும். இவனை விட்டுப்போவது கூடாது'' என்றெண்ணி அவன் தலையை வெட்டி எடுத்துக்கொண்டு, ஓடிவிட்டார்கள்.

இதற்குள் ஊர் ஜனங்களும் கூடிவிட்டார்கள். அவர்கள் அம்மாது செய்த தைரியமான செய்கையைக்கேட்டு அவளைப் புகழ்ந்து ஸர்க்காருக்குத் தெரிவித்தார்கள். ஸர்க்கார் விசாரணை முடிவில் அம்மாதினுடைய சாமார்த்தியத்தைப் புகழ்ந்து பேசி அவளுக்குத் தக்க பரிசளித்தார்கள்.

இதனால் நாம் தெரிந்துகொண்டது என்ன? தைரியமே ஜயந்தரும்—என்பதாகையினால் தைரியத்தைக் கைவிடுவது கூடாதென்றுணர்க.

(பாபுசாமிராவ்),

## தீமைசெய்தவன் தீமை அடைவான்

ஓர் ஊரில் போக்கிரிப் பையனொருவன் ஒருகையில் ஒரு சிறுவடையையும் ஒருகையில் ஒருசிறு கோலையும் வைத்துக்கொண்டு தன் வீட்டுமுன்வாசலில் நின்று தீண்டப்படாதா சாமி—தீண்டப்படாதா—தீண்டப்படாதாசாமி-தீண்டப்படாதா என்றுபாடிய வண்ணமிருந்தான். அவனுக்குப்பக்கத்தில் நிழலுக்காக ஒரு நாய் படுத்திருந்தது. அதைக்கண்ட அப்பையன், அதனை சு—சு—சு—என்று கூறிய வண்ணம் கையிலிருந்த வடையைக் காட்டிக் கூப்பிட்டான். நாய் வாலைக் குழைத்துக்கொண்டு அவனருகேபோய்—அவன் கைவடையை அணுகினாற்போல் முகத்தை நீட்டியது. பையன் அப்போது அதன் முகத்தில் சடேலென்று தன் கைக்குச்சியால் ஓர் அடி அடித்து— "ஓ வடையா உனக்கு- ஓடு என்றுகூறி நகைத்தான். நாய் வாள் வாள் என்று கத்திக்கொண்டே ஓடிவிட்டது.

இந்தப்பையன் செய்கைகளையெல்லாம் எதிர்த்த வீட்டிலிருந்த ஒரு கிழவர் கவனித்துக்கொண்டிருந்தார். அவர் இந்தப்பையனுக்கு அவன் செய்ததப்பிதத்தைத் தெரிவித்து நல்லறிவைப் புகட்டவேண்டுமென்று கருதித்தம்முடையகையிலொரு காலணாகாசை வைத்துக்கொண்டு— ''கிட்டு—கிட்டு இங்கே ஓடிவா இங்கே வா இதோ காசு;'' என்று அழைத்தார்.

பையன் ஆவலோடு ஓடி அவர் கைக்காசை வாங்கப் போனன். அப்போது கிழவர் அவன்கையில் பட்டென்று அடித்து "ஓடு கழுதை ஓடு; உனக்குக்காசா சை போ" என்றார்.

பையன் அடியைப்பட்டுக்கொண்டு கோபத்துடன் கிழவரைப்பார்த்து, "ஐயா சும்மாவிருந்த என்னைக் காசுகொடுப்பதாகக் கூப்பிட்டு இப்போது அடித்தீர்? உமக்கு நான் என்னகுற்றம் செய்தேன்" என்று கேட்டான்.

கிழவர்- "அப்படிவா வழிக்கு-நீயேன் சும்மா படுத்துக் கொண்டிருந்த நாயை வடைதருவதாக அழைத்துப்-பின் அடித்து விரட்டினுய்?- நாய் உனக்கு என்னகுற்றம் செய்தது?" -என்றுகேட்டான். பையன் தன் குற்றமுணர்ந்து வெட்கப்பட்டுத் தலை கவிழ்ந்து நின்றான்.

கிழவர் இனி இப்படிப்பட்ட கெட்ட செய்கையைச் செய்யாதே. கெட்ட செய்கை செய்தால் உனக்கும் கேடு சம்பவிக்கும். நல்லசெய்கை செய்தால் நன்மை கிடைக்கும். இதை மறவாதே ஓடு" என்று புத்தி மதி கூறியனுப்பினர்.

(சோமஸ்கந்தன்)

# குதம்பைசித்தர் பாடல்

## ஆநந்தக்களிப்பு

பாபஞ் செய்யாதிரு மனமே—நாளைக்
கோபஞ் செய்தே யமன்
கொண்டோடிப் போவான்
பாபஞ் செய்யாதிரு மனமே—

(1) சாபங் கொடுத்திடலாமோ —விதி
தன்னை நம்மாலே தடுத்திடலாமோ
கோபந் தொடுத்திடலாமோ— இச்சை
கொள்ளக் கருத்தே கொடுத்திடலாமோ (பாப)

(2) நீர்மேற் குமிழியிக் காயம்— இது
நில்லாது போய்விடும் நீயறி மாயம்
பார்மீதில்மெத்தவும் நேயம்—சற்றும்
பற்றாதிருந்திடப் பண்ணுமுபாயம் (பாப)

(3) நந்த வனத்தி லோராண்டி— அவன்
நாலாறு மாதமாய்க் குயவனைவேண்டி
கொண்டுவந்தா னொருதோண்டி—மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி (பாப)

(4) ஆணவமாகச் சொல்லாதே—தேடும்
சொத்துக்களிலொரு காசும் நில்லாதே
எடணை மூன்றும் பொல்லாதே— அதி
லிச்சை வைத்தாலெமலோகம் பொல்லாதே (பாப)

(5) நல்லவழி தனை நாடு— எந்
நாளும் பரமனை நத்தியே தேடு
வல்லவர் கூட்டத்திற் கூடு — அந்த
வள்ளலை நெஞ்சினில் வாழ்த்திக் கொண்டாடு (பாப

(6) நல்லார் தம்மைத் தள்ளாதே— அறம்
நாலெட்டி லொன்றேனும் நாடித் தள்ளாதே
பொல்லாங்கி லொன்றும் கொள்ளாதே—கெட்ட
பொய்மொழி கோள்கள் பொருந்த விள்ளாதே (பாப)

(வரும்)

# சிந்தனைக் கட்டளைகள்

(1) உன் வேலையில் ஒவ்வொரு அம்சங்களையும் ஜாக்ரதையாய்க் கவனி.

(2) எந்த விஷயத்திலும் ஊக்கமாக இரு.

(3) நன்றாக யோசனைசெய்து உறுதியாகத் தீர்மானஞ் செய்.

(4) நேரிடும் துன்பங்களைப் பொறுமையுடன் சகித்துக் கொள்.

5. வாழ்க்கையிலுண்டாகும் நன்மை தீமைகளைப் பொறுமையோடும் தைரியத்தோடும் ஏற்றுக்கொள்.

6. நியாயமானதைத் துணிவோடு செய்—நியாயமல்லாததைச் செய்யப் பயப்படு.

7. துர்மார்க்கரின் சகவாசத்தை நீக்கிவிடு.

8. ஸத்தியத்தைப் பரிசுத்தமுள்ளதாகக் காப்பாற்று.

9. அந்நியருடைய கீர்த்தியையாவது வர்த்தகத்தையாவது கெடுக்காதே.

10. சன்மார்க்க சீலரோடுமாத்திரம் ஸ்நேகம் செய்.

11. உன் மனதைக் கெட்ட எண்ணங்களினின்றும் விலக்கிக்கொள்.

12. எந்த லாபம் வருவதாயினும் அதுகருதிப் பொய் சொல்லாதே.

13. உனக்கு அறிமுகமானவர்கள் மிகச் சொற்பமாயிருக்கட்டும்.



14. நல்ல பழக்கவழக்கங்களை அநுசரி.

15. உன் கடன்களைத் தீவிரமாய்த் தீர்த்துவிடு.

16. ஒரு ஸ்நேகிதனுடைய ஸத்தியத்தைப்பற்றிச் சந்தேகிக்காதே.

17. உன் தாய் தந்தையர்களின் வார்த்தைகளைக் கனம் பண்ணு.

18. பணம்போனாலும் போகட்டும்—நல்லொழுக்கத்திற்கேதுவாகிய உன் கொள்கைகளைக் கைவிடாதே.

19. எந்த விஷயத்திலும் மிதமாயிரு.

20. உனக்குச் சாவகாசமுண்டானபோது உன்னை மேன்மைப் படுத்திக்கொள்வதில் முயற்சி செய்.

21. தீய செய்கை செய்பவரின் வாயிற்படியிலும் கால் வையாதே.

22. உன் மனோவிகாரங்களை ஜாக்கிரதையுடன் கவனி.

23. எல்லோருக்கும் உபகாரம் செய்பவனாயிரு.

24. நிலைகுலைந்து முயற்சியழிந்து தைரியஹீனனாய்த் தயங்காதே.

25. சரியான ஒன்றைச் சாதிக்க வைராக்கியத்தோடு பாடுபடு.

பா. சந்தோஷநாதம் பிள்ளை.

---

முத்திக்கு வித்தாய் முளைத்தெழுந்த சோதியையென்
பத்திக் குரித்தாம் பரஞ்சுடரைத்-தித்திக்கும்
தேனைக் கற்கண்டைத் திருவே ரகத்துறையெம்
மானைத் தினம்வணங்குவாம்

# ஸீதாதேவியும் அநஸூயையும்

ஸ்ரீ ராமபிரான் பிதிர்வாக்கியபரிபாலனத்தின் பொருட்டுத் தண்டகாரண்யம் சென்றபோது ஸீதா தேவியும் சென்றாளல்லவா? இவர்கள் அரண்யத்தில் அத்திரிமகரிஷியின் ஆச்ரமத்தில் தங்கினார்கள் அத்திரிமகரிஷி ஸ்ரீராமபிரானையும லட்சுமணனையும் உபசரித்தார். அத்திரிமகரிஷியின் மனைவியாகிய அநஸூயை என்கிற பதிவிரதை ஸீதையைவரவேற்று உபசரித்தாள். அப்பொழுது இருவரும் சம்பாஷித்துக் கொண்டனர்.

அநஸூயை-ஸீதே, நீ பாக்யவசத்தால் பதிவிரதா தர்மத்தை ஆதரவோடு கவனிக்கிறாய்? காட்டில் வசிக்கும் கணவனைப் பின் பற்றிய நீயே பாக்யசாலி. நாயகன் நரகத்திலே வசிப்பவனானாலும் வனத்தில் வசிப்பவனானாலும் பாவியாக விருந்தாலும் புண்யவானாகவிருந்தாலும் மனைவி அவன் மனமகிழ அவனுக்கு அன்புடன் பணிவிடை செய்து வருவாளானால் அவள் மேலான உலகத்தையடைவாள். கெட்டநடவடிக்கையுள்ளவனானாலும் நன்னடக்கையுள்ள பெண்டுகளுக்கு அந்தப்புருஷனே தெய்வம். ஆலோசித்துப்பார்த்தால் ஸ்திரீகளுக்குப் புருஷனைத் தவிர வேறு பந்துவைக்காணகிலேன். நல்லநடக்கையில்லாத ஸ்திரீகள், புருஷனை அநுஸரிப்பதிலுள்ள



குணதோஷங்களை அறியமாட்டாள். காமத்திற்கு வசமானவர்களும் கணவனை அடக்கியாள்பவர்களும் கெட்டகாரியத்தைச் செய்பவர்களுமாகிய ஸ்திரீகள் அபகீர்த்தியை அடைவார்கள். தாம் அடையக்கூடிய தர்மபலனையும் இழப்பார்கள். உலகத்தில் இது உயர்ந்தது இது தாழ்ந்தது. என்பதை அறிந்தவர்களும் நற்குண நற்செய்கைகளுடையவர்களுமான ஸ்திரீகள் தர்மநெறிதவறாதபுருஷர்கள் அடையத்தக்க நல்ல பதவியை அடைவார்கள். ஆதலால் நீ உன் புருஷனுக்குச் செய்யவேண்டிய பணிவிடை செய்வதிலும் அவரை மகிழ்விப்பதிலும் சிரத்தையும் உற்சாகமு முடையவளாயிரு—என்றாள்.

ஸீதை-மகாதபஸ்வினியாகிய உம்முடைய உபதேசத்தைக் கேட்டு மகிழ்ந்தேன். ஸ்திரீகளுக்குக் கணவனேதெய்வம் என்பதை நானும் அறிவேன். என்கணவன் நல்ல நடக்கையில்லாதவரா யிருந்தாலும் அவர், உபசாரணைக்குரியவரே யாவர், அப்படியிருக்க, சிறந்த குணங்களுக்கெல்லாம் இருப்பிடமாயும் தந்தை போலவும் தாய்போலவும் நன்மைபுரிபவராயுமிருக்கிற பர்த்தாவை உபசரிக்கப் பிறர் சொல்லவும் வேண்டுமா? ஸ்ரீராமர் தம்முடைய தாய்மார்கள் மூவரிடத்திலும் மரியாதை தவறாமல் நடந்துகொள்கிறார். என் நாதன் இந்தக் காட்டுக்குப் புறப்பட்டசமயத்தில் என் மாமியார் எனக்குச்சொல்லிய உபதேசம் என் மனத்திலிருக்கிறது-அக்கினிசாட்சியாக என் தாய் என் விவாக காலத்தில் உபதேசித்த வாக்யமும் என்மனத்

திலிருக்கிறது, உம்முடைய வாக்யத்தால் அவையெல்லாம் புதிதாகக் காணப்படுகின்றன. ஸாவித்திரியென்பவள் பர்த்தாவுக்குப் பணிவிடைசெய்து ஸ்வர்க்கத்திலும் கீர்த்திபெற்றாள். அவ்வித ஒழுக்கமுடைய உமக்கும் ஸ்வர்க்கம் சித்தமாயிருக்கிறது:—''என்றாள்,

அநஸூயை கேட்டு மகிழ்ந்து-ஸீதே உனக்குக் கற்பிலக்ஷணங்களெல்லாம் நன்றாகத்தெரிகிறது, உனக்குக் கடவுள் அநுக்ரஹமுண்டாகும்—என்று கூறி, "ஸீதே நீ ஸ்ரீராமனை ஸ்வயம்வரத்தில் அடைந்ததாக அறிந்தேன். அந்த வரலாறு அறிய விரும்புகிறேன். அதனை விவரமாய்க்கூற வேண்டும்'' என்றாள்.

ஸீதாதேவி, தான் ஜனனமடைந்தது முதல் தனக்கு விவாகமானது வரையில் எல்லாவற்றையும் அநஸூயைக்கு நன்கெடுத்துச்சொல்லி முடித்தாள். அநஸூயைகேட்டு ஆநந்தமடைந்து ஸீதைக்கு அநேக விலை உயர்ந்த ஆபரணங்களை அணிவித்து விலைமதிப்புள்ள ஆடையுமுதவினாள். ஸீதை அவைகளை அணிந்துகொண்டு ஸ்ரீராமனிடம் வந்து அவரை மகிழ்வித்தாள்.

---

உத்தர மகா சமுத்திரத்திலும் தக்ஷிண மகா சமுத்திரத்திலும் ஒரு வருஷத்திற்கு மேலான பனிக்கட்டிகளில் உப்பே இருப்பதில்லை. ஆனால் புதிய பனிக்கட்டிகள் கடல் நீரைப் போல உப்புள்ளவையாக இருக்கின்றனவாம்.

## சித்த வைத்திய நூல்

இதில் யூகிமுனி பூரணம்-100, யூகிமுனி கரிசல்-152, அகஸ்தியர் ஷண்முக ஜால மென்னும் சர்ப்பராஜக் குளிகை-43 ஆகிய மூன்று நூல்களும் அடங்கி யிருக்கின்றன. இவ் வபூர்வமான சித்த வாத வைத்திய நூல்களிலுள்ள முறைகள் பூர்வகாலத்தில் குருசிஷ்ய பரம்பரையாக அனுபவிக்கப்பட்டு வந்தன; ஆயினும், அந்நூல்கள் பெரும்பான்மையும் வெளி வராமலே பலவிடங்களில் சிதறிக்கிடப்பதன்றி, அவற்றை வைத்திருப்பவரும் உலகோபகாரமாக வெளியிடாமலே சேமித்து வைத்திருக்கின்றனர். அதனால் பல அருமையான சித்தர் வித்தைகள் மங்கிக் கிடக்கின்றன; காலக்கிரமத்தில் அவையும் வெளிவராமலே அழிந்துபோகக்கூடிய நிலைமையிலிருப்பது பரிதபிக்கத் தக்கதாம். சித்த வைத்தியம் தலையெடுக்கும் தற்காலத்தில் மேற்படி நூல் வெளியாவது சித்த வைத்தியத்திற்கு ஆக்கத்தைத் தருவதாகும். இந்த நூல், சென்னையில் குஜிலிக் கடைகளில் பிழைமலிந்து ஆபாசமான காகிதத்தில் வெளிவந்திருக்கும் நூல்களைப்போலல்லாது, உயர்ந்த காகிதத்தில் பிழையறப் பரிசோதித்து அச்சிடப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது. இது, சென்னை, கோமளேசுவரன்பேட்டை, "அம்பாவிலாச" புத்தகசாலையில் ஒரு ரூபாய்க்குக் கிடைக்கும்.

## நான்கண்ட புதுமை.

---

நான் 10-8-29-ந்தேதி யன்று இரவு ஈரோட்டிலிருந்து—Blue Mountain Express என்ற பெயர் கொண்ட ரயிலில் புறப்பட்டுச் சென்னைக்கு வந்தேன். நான் ஏறிய வண்டியில் பத்துப்பேரிருந்தனர். அவர்களில் ஒருவர் - ஆங்கிலேயர்போல் உடைதரித்துக் கொண்டிருந்ததுமல்லாமல்-தமது சௌகரியத்தையே பெரிதா யெண்ணிப் பிறரை அவமதிக்கும் ஈனமதியினன் என்று நினைக்கும்படி தமது பெட்டி பேழைகளுடனும் படுக்கையுடனும் ஒரு கம்பார்ட்மென்டையே அதாவது ஓர் அறையையே தம் வசத்தில் வைத்துக் கொண்டு பிர்மானந்தமாய்த் தூங்கிக் கொண்டு வந்தார். வண்டி அரக்கோணம் வந்தது. அப்போது மணி ஆறரையாயிற்று. நாங்கள் எல்லோரும் இறங்கிக் குழாயில் பல்லைவிளக்கி முகம் கழுவிக் கொண்டு காப்பிக்கடையில் நுழைந்து பசியாற்றிக் கொண்டு வண்டிக்கு வந்தோம். வண்டியும் புறப்பட்டது. வண்டி புறப்பட்டுக் கொஞ்சதூரம் போனதும் சுயநலப்பிரியர் விழித்துக் கொண்டார்; உடனே தமது கைப்பெட்டியைத் திறந்தார். அதில் கண்ணாடி சீப்பு-பல்விளக்கும் பிரஷ்-டாக்டர்கள் நோயாளிகளைக் கவனிக்கும்போது அள்ளையிலும் முதுகிலும் வைத்துப் பார்க்கும்-குழாய்க் கருவி யொன்று-கத்தி சோப்பெட்டி-இவைகளும்-இன்னும் சில பிரயோசனமற்ற சாமான்களும் இருக்கக் கண்டேன்.

சுயநலப்பிரியர்—கண்ணாடியை யெடுத்துப் பெட்டியில் சாத்திவைத்திக்கொண்டு தம்முடைய கிராப் தலைமயிரைச்சீவிச் சரிப்படுத்திக்கொண்டு அருகிலிருந்தவரைப் பார்த்து—"ஐயா-அரக்கோணம் தாண்டி விட்டோமா?"—என்று கேட்டார். அவர் "தாண்டி விட்டோம்." என, சுயநலப்பிரியர் "ஓகோ தூங்கி விட்டேன்" என்று ஆங்கிலத்தில் கூறிக்கொண்டே தம்மிடமிருந்த ஒரு சிறு அலுமினியச் செம்பை எடுத்துக்கொண்டு கக்கூசுக்குள்ளே நுழைந்தார். நுழைந்தவர்-அங்கே கால்கழுவுவதற்காக வைத்திருக்கும் குழாயில் ஜலம் பிடித்துக்கொண்டு வெளியே வந்து-பிரஷினால் பல்லைத்துலக்கி அந்த ஜலங்கொண்டு வாய கொப்புளித்து முகங்கழுவிப் பரம பரிசுத்தமடைந்தவர்போல் தம்மிடத்தில் வந்துட்கார்ந்து கொண்டு—"Illustrated Times of India" என்கிற பத்திரிகையை எடுத்து முகத்தில் மூக்குக்கண்ணாடி போட்டுப் படிக்கத் தொடங்கினார்.

இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த பத்து வயதுப் பையனொருவன் சிறு குரலில் தன் தாயைப் பார்த்து "அம்மா, அம்மா" என்றழைத்து "என்ன இந்த மாமா கக்கூசுக்குழாயில் ஜலம்பிடித்துப் பல்விளக்கிக்கொண்டார். கக்கூசுக்குழாய் அசுத்தமானதென்பதும் அது அசங்கியமுடையதென்பதும் இவருக்கேன் தெரியவில்லை? பார்த்தால் இங்கிலீஷ் டாக்டரைப்போலிருக்கிறாரே" என்று கேட்டான்.

தாயார் மெதுவாய், "அசடே வாயை மூடு" என்று தலையில் தட்டினுள்.

இதைச் சுயாகலப்பிரியர் கவனித்தாராதலால் உடனே எழுந்து, "அம்மா குழந்தை அசடல்ல நான்தான் அசடு. நான் ஒரு டாக்டராயிருந்தும் கம்பிகுழாயில் ஜலமெடுத்துப் பல் விளக்குவது ஆசாரக்குறைவென்பதை உணராமற் போனேனல்லவா?" என்று எல்லோருடைய முன்னிலையிலும் தம் பிழையை ஒப்புக்கொண்டு "இப்படிப்பட்ட என் பிழையை எனக்குரைத்ததால் இக்குழந்தையை நான் மறக்கமுடியாது" என்றுகூறி ரூபா ஒன்றெடுத்துக் குழந்தைக்கு இனும் கொடுத்து மகிழ்ந்தார். பிறகு வண்டிபேஸின்பிரிட்ஜுக்குவந்ததும் பட்லரை அழைத்து டீ கொண்டுவரக் கட்டளையிட்டார். அவன் பீங்கான்கிண்ணியில் டீ கொண்டுவந்து தந்தான். அதைப் பருகி-பில் (Bill) கேட்டார். அவன் மூன்றணுவுக்குப் பில் தந்தான். டாக்டர்-அவனிடம் மூன்றணுவைக் கொடுத்துவிட்டு—முகத்தைத் துடைத்துக் கொண்டார். அதுகண்ட என் மனம் "ஐயோ! ஓர் அணுவுக்கு ஒரு கப் டீ கிடைக்கும் காலத்தில் மூன்றணுவைக் கொடுத்துப் பட்லர் கை டீ பருகிய இந்த நாகரீகர். தம் வாழ்நாளை எப்படிக் கடத்தப்போகிறார்-செட்டுள்ளவ ரிடமல்லவா செல்வஞ் செழிக்கும்?" என்று எண்ணி-'இதுதான் நாகரீகம்! இதுதான் மேல்நாட்டு வாசியின் பிரதாபம்! இதுதான் கண்ணியமான வாழ்க்கை-போலும்.'-எனப் பேசிக்கொண்டே பட்டணம் வந்தேன். (பாலவிநோதினி)

## லக்ஷ்மி

அதிவீரராம பாண்டியன் அருளிச்செய்தது.

### விருத்தம்

மடற்கமல நறும்பொகுட்டில்
அரசிருக்குஞ் செந்துவர்வாய்
மயிலே! மற்றுன்
கடைக்கண் அருள் படைத்தன்றோ
மணிவண்ணன் உலகமெலாங்
காவல் பூண்டான்
படைத்தனன் நான்முகக்கிழவன்
பசுங்குழவி மதிபுனைந்த
பரமன் தானும்
துடைத்தனன் நின்பெருஞ் சீர்த்தி
யெம்மனோ ரால் எடுத்துச்
சொல்லற் பாற்றோ?

மல்லல் நெடும் புவி யனைத்தும்
பொது நீக்கித் தனிப் புரக்கும்
மன்னர் தாமும்
கல்வியினிற் பே ரறிவிற்
கட்டழகில் நிகரில்லாக்
காட்சி யோரும்

வெல்படையிற் பகைதுறந்து
வெஞ்சமரில் வாகை புனை
வீரர் தாமும்
அல்லிமலர்ப் பொகுட் டுறையும்
அணியிழை! நின் அருணோக்கம்
அடைந்து ளாரே.

செங்கமலப் பொலந்தாதில்
திகழ்ந்தொளிரும் எழில் மேனித்
திருவே! வேலை
அங்கண்உல கிருள் துறக்கும்
அலர் கதிராய் வெண்மதியாய்
அமரர்க் கூட்டும்
பொங்கழலாய் உலகளிக்கும்
பூங்கொடியே! நெடுங்கானிற்
பொருப்பில் மண்ணில்
எங்குளை நீ அவ ணன்றோ
மல்லல்வளஞ் சிறந் தோங்கி
யிருப்ப தம்மா!

## உடற்பயிற்சியும் சுகாதாரமும்

காசி — சிவசங்கரப்பண்டிதர் பாடியது.

கொச்சகப்பா

அறந்தழைக்கு நிலவுலகி
லாயசிறு குழவிகளும்
பிறந்தநாள் முதலாகப்
பிரியமுடன் கைகாலை
உரம்பெறவே யாட்டுகின்ற
வுண்மைதனை நோக்குவமேல்
சிறந்தபய னுடற்பயிற்சி
செய்யுமென வறிவோமே. (௧)

இளங்கன்று பிறந்தவுட
னெழுந்தோடி விளையாடி
யுளம்பெற்ற மகிழ்ச்சியுட
னுடற்பயிற்சி செய்வதினால்
வளம்பெற்று நாடோறும்
வளருவதைக் காண்போமேல்
விளங்குமுடற் பயிற்சிநிதம்
வேண்டுமென வுணர்வோமே. (௨)

கடற்கரைசூழ் நிலவுலகிற்
காணுமுயிர்க் கூட்டமெலாம்

உடற்பயிற்சி செய்வதினு
    லுறுப்புனை யடைவதலால்
குடற்குறனு முண்டாகிக்
    கொண்டவுண விரத்தமதாம்
இடர்ப்பாடொன் றிலதாகு
    மெழிலுமிக வுளதாமே. (௩)

செப்பரிய வுடற்பயிற்சி
    செய்யாதார் மெய்த்தொகுதி
யுப்பிருந்த பாண்டமென
    வுளுத்துவிடு மல்லாமல்
வெப்பகன்ற நார்த்தசைகள்
    வெறும்பஞ்சை யொப்பாகி
இப்புவியி னடைப்பிணமா
    யின்பமென்ப தறியாரே. (௪)

கண்டீரோ நண்பர்களே
    கருவடைந்து பிள்ளைப்பே
றுண்டாகா திருப்பதுவு
    முண்டாகின் பெறமுடியாச்
சண்டாள நோயுறலுஞ்
    சற்றுமுடற் பயிற்சியிலாப்
பெண்டிர்க்கே பாடுபடும்
    பேதையர்க்குக் குறையிலையே. (௫)

பெற்றோரே யிளமையினும்
    பிள்ளைகளைப் பலகலைகள்



கற்றேத வைப்பதுபோற்
    காலையுடற் பயிற்சியையுஞ்
சொற்றேத வைப்பீரேல்
    சுகமான வாழ்வுறுவார்
எற்றேமற் றக்கல்வி
    யிளைத்தபிணி யாளருக்கே. (௬)

---

அறுசீர் விருத்தம்

வயிறு பருத்தே யுடற்கூனி
    வடிவஞ் சிறுத்து வாழ்நாளிற்
றுயரம் பெறவோ விவ்வுலகிற்
    றோன்றி வளர்த லம்மம்மா!
வயிரம் பெற்ற வுடம்போடே
    மனதின் றிடமும் பெற்றோர்க்கே
உயரும் செயலுங் கைகூடும்
    ஒப்பில் லாத புகழாமே. (௭)

மூதிர்ந்த பருவ முடையார்க்கு
    முக்ய மாகு முடற்பயிற்சி
அதிர வுழைத்து வருந்தாம
    லான வரையி னடப்பதுவுந்
துதிகொள் கோவில் சுற்றுவதும்
    தோட்ட வேலை செய்வதுவும்
விதியில் வீட்டு வேலையெலாம்
    விரும்பிச் செயலுந் தகுந்தவையே. (௮)

தூய காற்றை நல்லுணவைச்
சுத்த நீரை யுட்கொள்ளும்
நேய முடனே வுடற்பயிற்சி
நித்த மியற்றிக் குளிப்பதுவும்
ஆய வுறக்கஞ் செய்வதுவு
மாடை வெளுத்துக் கட்டுவதுந்
தீய பிணியை நீக்கியுரன்
செய்யு மினிய நட்பாமே. (கூ)

ஐந்தை யடக்கிப் பொறுமையுட
னாண்டா னடியைப் பணிவதுவும்
விந்தை யொழுக்கிப் போக்காமல்
மின்னார் கலவி விரும்பாமல்
மைந்தர் பெறுமோர் வாழ்விற்கே
மணஞ்செய் கின்ற மாதவர்கள்
சிந்தை மகிழ நூறாண்டு
சீவித் திருப்ப ருலகினிலே. (க0)

## காலபேதங் காட்டுங் கருவி

கற்பூரம் 94 தானிய எடை; சுமார் 90% (பர்ஸெண்ட்) உள்ள (ஆல்கஹால்) சாராயம் 47 தானிய எடை வடிகட்டின தண்ணீர் 422 தானிய எடை இவற்றை ஒன்றாய்க் கரைக்கவும். வடிகட்டின பின் ஒரு ஸெண்ட்டி மீட்டர் அகலமும் 25 ஸெண்ட்டி மீட்டர் நிகளமு முள்ள ஒரு கண்ணாடிக் குழாயில் நிரப்பிக் கார்க்கு (Cork) போட்டு வைத்துப் பின் அரக்கினால் (Wax) மூடவேண்டும். இதைச் சுவற்றில் தொங்கவிடுவதற்குச் சௌகரியமான ஒரு மரச்சட்டத்தில் அமைத்தல் அவசியமானது.

கவனிப்பு :—1. கண்ணாடிக் குழாயில் திரவம் சுத்தமாகத் தென்பட்டால் 'நல்ல காற்று வீசும்' என்றும், 2. அடிப்பாகத்தில் துளிகளாகத் தோன்றினால் 'கனத்த காற்றும் மாரி காலத்தில் உறைபனி' என்றும், 3. திரவம் மங்கலாக இருந்தால் மழை யென்றும், 4. துளிகளினால் மங்கலான திரவமா யிருந்தால் 'சப்தமுள்ள புயற்காற்று அடிக்கும்' என்றும், 5. பெரிய செதில்களா யிருக்குமாயின் 'பனி' என்றும், 6. மேல்பாகத்தில் நூல்போலிருந்தால் 'மழையுள்ள காற்று' என்றும் பல பல விதமாய் அறிந்துகொள்ளலாம். இது ஓர் நூதனமானதும் அருமையானதுமான கருவியாகும். இதனைச் செய்வதின் உதவியால் நல்ல ஊதியத்தை யடையலாம். என்று திண்டிவனம் கைத்தொழில் ஆசிரியர் கலிவ. தி. ர. கோபாலகிருஷ்ணன் எழுதுகிறார்.

# வரலக்ஷ்மி விரதம்

நைமிசாரண்ய க்ஷேத்ரத்தில் தவஞ்செய்து கொண்டிருக்கும் சௌனகாதி மஹாரிஷிகளை நோக்கிச் சூதமகாமுனிவர் சொல்லுகிறார்.

ஓ முனி சிரேஷ்டர்களே! ஸ்திரீகளுக்கு ஸர்வ சௌபாக்யத்தைக் கொடுக்கும் உத்தம விரதம் ஒன்றுண்டு. அதைப் பரமேச்வரன் பார்வதிக்குச் சொன்னார். அந்த சிரேஷ்டமான விரதத்தை உங்களுக்குச் சொல்லுகிறேன் கேளுங்கள். கைலாஸ பர்வதத்தில் வீற்றிருந்த பரமேச்வரனைப் பார்வதிதேவி நமஸ்கரித்து "ஓ தேவா! உலகத்தில் ஸ்திரீகள் எந்த விரதத்தைச் செய்தால் புத்ர பௌத்திராதி சகல ஸம்பத் துண்டாகி ஸுக மடைவர்களோ அத்தகைய விசேஷ விரத மொன்றை எனக்குத் தெரிவிக்க வேண்டும்" என்று கேட்டபோது பரமேச்வரன் சொல்லத் தொடங்கினார்.

பார்வதீ, ஸ்திரீகளுக்கு சர்வஸம்பத்கரமானதும் புத்திர பௌத்திராபி விருத்தியை உண்டாக்கும்படியானதுமாகிய வரலக்ஷ்மிவிரதம் ஒன்றுண்டு. அந்த விரதம் ஆவணி மாதம் பூர்வ அல்லது சுக்லபக்ஷ பருவத்திற்கு முன்னேவரும் வெள்ளிக்கிழமையில் செய்யவேண்டும்—என்று சொன்னார்.



பார்வதி யானவள் அப்போது பரமேச்வரரை நோக்கி, "ஓ மஹாப்ரபோ, தாங்கள் சொல்லும் இந்த விரதம் எவ்விதமாய் எந்த தேவதையை எந்தக்காலத்தில் பூஜிக்க வேண்டியது? பூர்வத்தில் இந்த விரதம் யார் அனுஷ்டித்துப் பயனடைந்தார்களோ அந்தப் புண்ய கதையையும் எடுத்துச் சொல்லும்" என்று பிரார்த்தித்துக் கேட்கப் பரமேச்வரன் பார்வதியை நோக்கிச் சொல்லத் தொடங்கினார்—ஓ பார்வதீ! இந்த வரலக்ஷ்மீ விரதத்தை விவரமாய்ச் சொல்லுகிறேன் கேள்—

மகத தேசத்தில் குண்டின புரமென்று ஓர் பட்டண முண்டு. அப் பட்டணமானது பொன்மயமான கோபுரங்களாலும், மெத்தை, மேடைகளாலும், மதில்களாலும், மிக அழகா யிருந்தது. அப் பட்டணத்தில், சாருமதி என்னும் ஒரு பிராமண ஸ்திரீ இருந்தாள். அப்பெண்மணி சிறந்த பதிவிரதை. தான் செய்யும் பதி பக்தியாலும், பெரியோர்களிடத்திலுள்ள பய பக்திகளாலும், தெய்வ பக்தியினாலும் அவள் சிறந்து விளங்கினாள். தன் கணவனையே தெய்வமாக நினைத்து தினம் உதய காலத்தில் எழுந்து பதியை நமஸ்கரித்துப் பாதங்களைச் சுத்தி செய்து புஷ்பங்களால் பூஜை செய்து, பிறகு மாமி மாமன்மார்களையும் வணங்கிப் பணிவிடைகள் செய்துவிட்டு வீட்டு வேலைகள் செய்யத்தலைப்படுவாள். தவிர யாரிடத்திலும் மிதபாஷிணி யாகவும், உரத்த குரலின்றியும் பேசுவாள். இப்படிக் கற்புடனிருந்த

அந்த ஸ்திரீ விஷயத்தில் மகாலக்ஷ்மிக்கு மிக்ககருணை உண்டாகி அனுக்கிரஹித்தாள். ஒருநாள் ராத்திரி சாருமதியின் சொப்பனத்தில் வரலக்ஷ்மீ தேவி பிரசன்னமாகி, "ஓ சாருமதீ உன்னிடத்தில் எனக்குக் கிருபையுண்டாகி உனக்கு அனுக்ரஹிக்க ப்ரத்யக்ஷமானேன. ஆவணி மாத பூர்வ பக்ஷ பருவத்தில் என்னைப் பூஜித்தால் நான் உன்கோரிக்கைகளைப் பூர்த்தி செய்கிறேன்" என்று சொல்ல, உடனே சாருமதி தன் கனவிலேயே லக்ஷ்மீ தேவியை வலம் வந்து நமஸ்கரித்து ஸ்தோத்திரம் செய்தாள்.

---

நமஸ்தே ஸர்வலோகாநாம்,
ஜனன்யை புண்ணிய மூர்த்தயே,
சரண்யே த்ரிஜகத் வந்தியே,
விஷ்ணு வக்ஷஸ்த லாலயே.

என்று அநேக விதமாய் ஸ்தோத்ரம் செய்து "ஓ ஜகன்மாதா, உன் கடாக்ஷத்தினால் ஜனங்களுக்கு சகல ஸம்பத்தும், வித்தைகளு முண்டாகும் என்பதற்கு என்ன தடை? என்னுடைய பூர்வ புண்ணிய வசத்தால் உம்முடைய பாத தரிசனம் கிடைத்தது" என்று சொல்ல மஹா லக்ஷ்மிக்கு மிகச் சந்தோஷ முண்டாகியது. அந்தத் தேவி சாருமதிக்கு வெகு வரங்க ளளித்துப் பிறகு அந்தர்த்யான மடைந்தாள். சாருமதி உடனே கண் விழித்தெழுந்து வீட்டின் நாற்புறமும் சுற்றிப் பார்த்து வரலக்ஷ்மீ தேவியைக் காணாமல், "ஓ ஹோ!



வரலக்ஷ்மி. ப. 399.

நான் கனவு கண்டேன்" என்று அறிந்து இந்த சொப்பன விருத்தாந்தத்தைத் தன் கணவனிடமும், மாமி மாமனாரிடமும் மற்றுமுள்ளவர்களிடமும் சொன்னாள். அவர்கள் இந்தக் கனவு மிக உத்தமமானது என்று சொல்லி, ஆவணி மாதம் வந்தவுடனே மஹாலக்ஷ்மி சொன்ன நாளில் கனவிற் கண்டபடி மேற்படி விரதத்தை அவசியமாய் நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். பிறகு சாருமதியும் மற்றவர்களும் அந்த நாளை எதிர்பார்த்திருந்து வரலக்ஷ்மி சொன்ன நாள் வந்தவுடனே அந்த வெள்ளிக்கிழமையில் உதய காலத்தில் விழித்துக் கொண்டு ஸ்நாநம் செய்து, அநேக விசித்திரமான பட்டு வஸ்திரங்கள் உடுத்துச் சாருமதி தேவியின் வீட்டில் ஓர் இடத்தில் கோமயத்தால் மெழுகி மண்டப மேற்படுத்தி அங்கே ஓர் ஆசனம்போட்டு அவ்விடத்தில் கோலங்களிட்டுப் புதிதான அரிசியைக் கொட்டி, ஆல், அரசு, புரசு, அத்தி, மாங்கிளைகளும் வெற்றிலை முதலிய பஞ்ச பல்லவங்களும் வைத்து ஒரு தேங்காயுடன் கலசம் அலங்கரித்து வரலக்ஷ்மி தேவியை அந்தக் கலசத்தில் ஆவாஹனம் செய்து, மஹா பக்தியும் சிரத்தையுமுள்ளவர்களாய்ச் சாயங்காலத்தில் அந்த லக்ஷ்மி தேவியைத் தியானித்துச் சொல்லுகிறார்கள்—

பத்மாஸனே, பத்ம கரே,
ஸர்வ லோகைக பூஜிதே,
நாராயண ப்ரியே, தேவி
ஸுப்ரீதா பவ, ஸர்வதா ॥

என்கிற சுலோகத்தினால் வரலக்ஷ்மீ தேவியைத் தியானித்து சோடசோபசார பூஜைகள் செய்து ஒன்பது இழைகளும் முடிகளுமுள்ள நோன்புக் கயிற்றை வலக் கையில் கட்டிக்கொண்டு வரலக்ஷ்மிதேவிக்கு ஒன்பது வித பலஹார தினுசுகள், நிவேதனம் செய்து கர்ப்பூர தீபாராதனை முதலிய சோடசோபசாரங்களுடன் பிரதக்ஷிண நமஸ்காரம் செய்ய ஆரம்பித்தார்கள். ஒரு தரம் வலம்சுற்றி வந்தவுடனே, அந்த ஸ்திரீகளுடைய கால்களில் கலகல வென்று ஓசையுண்டாயிற்று. உடனே எல்லோரும் தங்கள் கால்களைப் பார்க்க கெஜ்ஜை முதலிய ஆபரணங்கள் உண்டாயிருக்கக்கண்டு சாருமதி முதலியஸ்திரீகள் ஓஹோ வரலக்ஷ்மிகடாக்ஷத்தினால் இந்த ஆபரணங்கள் உண்டாயினவென்று மிகக்களித்து, இரண்டாவது பிரதக்ஷிணம் செய்ய ஹஸ்தங்களில் தளதள வென்று பிரகாசிக்கும் நவரத்தின கசிதமான கங்கணாதி ஹஸ்தாபரணங்களைப்பார்த்தார்கள். மூன்றாவது ப்ரதக்ஷணஞ் செய்தவுடனே அந்த ஸ்திரீகளெல்லோரும் ஸர்வாபரண பூஷணாலங்க்ருதர்களானார்கள். ஸ்வர்ண மயமான ரதகஜ துரகாதி வாஹனங்களுடன் நிறைந்த மெத்தை மேடைகளுடன் கூடிய வீடுகளுடையவர்களாய்ச் சாருமதி முதலிய ஸ்திரீகள் விளங்கினார்கள். பிறகு அந்தப் பெண்மணிகளை அழைத்துக் கொண்டுபோக, அவரவர் வீடுகளினின்று வேலைக்காரிகள், பலவிதமாயுள்ள வாஹனங்களுடன், வரலக்ஷ்மி தேவியைப் பூஜிக்கும் இடம் வந்து நிறைந்திருந்தார்கள். அப்போது சாருமதி முதலிய ஸ்திரீகளுள்



விதிப்படி பூஜை செய்து வைத்த ப்ராம்மணோத்தமரைக் கந்த புஷ்பாக்ஷதைகளால் பூஜித்து அவ்விடத்தில் சுவாமிக்கு நிவேதனமான பலகார தினுசுகளில் பன்னிரண்டு எண்ணுள்ள பலகார வகைகளையும், தக்ஷிணாதி தாம்பூலங்களுடனும் அவருக்குக் கொடுத்து நமஸ்கரித்து அவ்வந்தணரின் ஆசீர்வாத மடைந்து, பிறகு அத்தேவிக்கு நிவேதித்த மீதிப் பக்ஷணங்களைத் தங்கள் பந்துக்களுடன் புசித்துத் தங்களை அழைத்துக்கொண்டு போக வந்திருந்த வாஹனங்களில் ஏறிக்கொண்டு, தங்கள் தங்கள் வீடுகளைநோக்கிப் போகும்போது ஒருவரோடொருவர் "ஓ ஹோ! சாருமதீ தேவியின் பாக்கியம் என்னவென்று சொல்லலாம்? வரலக்ஷ்மிதேவிநேராகச் சாருமதியின் ஸ்வப்பனத்தில் பிரத்தியக்ஷமாய்ச் சொல்லியபடியே செய்தாள். அவளா லல்லவோ நாமெல்லோரும் இத்தகைய மஹா பாக்கியவதிகளானோம்" என்று அச்சாருமதீ தேவியை மிகப்புகழ்ந்து பேசிக்கொண்டே அவரவர் வீடுகளுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அது முதல் சாருமதி முதலிய ஸ்திரீகளெல்லோரும், இந்த வரலக்ஷ்மி விரதம் பிரதி வருஷமும்செய்து புத்திரபௌத்ர வ்ருத்தியாய் ஸகல ஸம்பத்துடன் வாழ்ந்திருந்தார்கள். ஆகையால்—ஓ பார்வதீ இவ்வுத்தம விரதத்தை, ப்ராம்மணர் முதல் நாலு ஜாதியார்களும் செய்யலாம். அப்படி செய்கிறவர்கள் ஸகல ஸம்பத்துகளையு மடைந்து, சுகமாக இருப்பார்கள். இக்கதையைக் கேட்கிறவர்களும்,

படிக்கிறவர்களும், விரதபூர்த்தி செய்கிறவர்களும் வரலக்ஷ்மி வரப்பிரசாத மடைந்து சகல கார்ய சித்தியுடன் வாழ்ந்து பிறகு நற்கதி அடைவார்கள்.—என்றார் சிவபெருமான்.

---

## மரத்தில் வசிக்கும் குடும்பம்

இங்கிலாந்தில் மிஸ்டர் ஏ. ஜே. சாப்லன் என்பவரும் அவர் மனைவியும், நாலு சிறிய ஆந்தைக்குஞ்சுகளும், பெர்கன்ஷரில் உள்ள ஓர்க்கிங்ஹாம் என்ற இடத்திற்கு மூன்று மைல்களுக் கப்பாலுள்ள பாக்ஹாம் லைட்என்ற காட்டில் ஓர் பெரிய மரத்தில் வீடமைத்துவசிக்கின்றனர். அவர் விலாசம்'தேவதாருமரம் பார்க்ஹாம் லைட், வின்ச்சாய்ஸ்ற்றெட்' என்பதாம், மூன்று ஆண்டுகட்கு முன் சாப்லன் அங்குச் சென்று, பிரம்மாண்டமான ஓர் மரத்தில் மூன்று அறைகளுடன் ஓர் வீடு அமைத்து ஆந்தைக்குஞ்சுகளுடனும் மனைவியுடனும் வசித்து வருகின்றனர். 'ஜனங்கள், நாங்கள் ஏன் இங்குக் குடியிருக்கின்றோம்?'' என்று ஆச்சரியப்படுகின்றனர். அதற்குக்காரணம் நான் இயற்கையில் மிக்க பிரீதியுடையவனா யிருப்பதே. இக்காட்டில இயற்கையின் வனப்பு மிகவும் அழகாயிருக்கின்றது. நானே முதலில் இங்கு குடியேறவந்தவுடன் அதன் பின்னர் பலர் இப்பாகம் வந்து, பங்களாக்களில் வசிக்கின்றனர்'' என்கிறார். ஆந்தைக்குஞ்சுகளன்றி இருகுருவிகள், இருநாய்கள், ஒரு வெள்ளாடு, ஐந்து கோழிக் குஞ்சுகள், ஒரு பூனை முதலியனவே, அவர் குடும்பம். ஆந்தைக் குஞ்சுகள், மிஸ்டர் சாப்லனுடனும், அவரது மனைவியோடும் மேஜை மீது உட்கார்ந்து உணவருந்துவது வழக்கமாம்.

20777

# பாலவிநோதினி

## குழந்தைகளின் அன்பன்

| | | |
|---|---|---|
| வருட சந்தா தபாற் கூலி உட்பட | இந்தியா, பர்மா, சிலோன் ... | ரு. 1 8 0 |
| | பினங்கு. சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ... | ரு. 2 0 0 |
| தனிச்சஞ்சிகை ... ... | விலை | ரு. 0 2 0 |

1. பத்திரிகைக்கு ஜனவரீ முதல் டிசம்பர்மீ வரையில் ஒரு வருஷக்கணக்கு. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி மாதம் முதற்கொண்டே சஞ்சிகைகள் அனுப்பப்படும் ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

2. சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் முழு விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

3. சந்தாத்தொகையை முன்னாடி செலுத்தியாவது அல்லது வி. பி. யில் கட்டியாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

4. வி.பி. யில் பெற்றுக் கொள்வதானால் அணா மூன்று அதிகமாய்ச் செலவாகிறபடியால் சந்தாத்தொகையை மணியார்டர் செய்வதே நலம். இது முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது.

5. யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் ஒரு மாதத்திற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும்.

6. இடம்மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புதுவிலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை அறிவிக்கவேண்டும்.

7. சந்தா நெம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

### விளம்பர விகிதம்

| | |
|---|---|
| ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு ... | ரூபா 10—0—0 |
| அரைப் பக்கத்திற்கு ,, ... | ரூபா 5—0—0 |

காண்டிராக்ட் ரேட்டானால் சகாயமுண்டு.

விலாஸம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,
323, திருவொற்றியூர் ஹைரோட், சென்னை.

# அமிர்தாஞ்சனம்.

சர்வ நோய்களுக்கும்




ஸித்த ஔஷதம்

விலை அணா 10 அணா 0-10-0

இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
அழகாய் பாக்கிங்செய்து உபயோகத்துக்குத் தயாராய்

## எல்லா நோவுக்கும்

ஒரு கைகண்ட ஔஷதம் அமிர்தாஞ்
சனமே. தலைவலி, முதுகுவலி, கீல்பிடிப்பு முத
லிய சகலநோய்களையும் நொடிப்பொழுதில் தீர்க்கும்.

## அமிர்தாஞ்சன் டிப்போ,

**7, தம்புச்செட்டி தெருவு, சென்னை.**


Vavilla Press, Madras.